// ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

**2466/27 - 2025 දෙසැම්බර් මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.12.11**

*2466 /27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

L. D. B. - 3/2021 (III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4)ஆம் உபபிரிவு, 6 ஆம் பிரிவின் (யு) பந்தி மற்றும் 10 ஆம் பிரிவின் (4) ஆம் உபபிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 72 ஆம் பிரிவின் கீழ், துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ள விதிகள்.

**ரேவன் விக்ரமசூரிய,**
பணிப்பாளர் நாயகம் - கொழும்பு துறைமுக நகர
பொருளாதார ஆணைக்குழு .

கொழும்பு.

**விதிகள்**

1. இவ் விதிகள், 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர சமூக விதிகள் என அழைக்கப்படலாம்.

2. கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள குடிமனைத் தொகுதி அல்லது வளாகங்களின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்களுக்கு இவ்விதிகள் பொருந்தும்.

3. குடிமனைத்தொகுதிகள், வளாகத்தின் சகல உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்களும் அத்தகைய குடிமனைத் தொகுதிகள் அல்லது வளாகத்தின் பயன்பாடு மற்றும் உடைமையாக்குதல் தொடர்பில், அவ்வுரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வைத்திருக்கும் யாதேனும் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

4. யாதேனும் குடிமனைத்தொகுதிகள் அல்லது வளாகத்தின் உரிமையாளரும், குடியிருப்பாளரும், 2023 யூன் 2 ஆம் திகதிய, 2334/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அக் குடிமனைத்தொகுதிகள் அல்லது வளாகத்தை அதன் அனுமதிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு மாத்திரமே பயன்படுத்துவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. யாதேனும் குடிமனைத் தொகுதிகள், வளாகத்தின் அனைத்து உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்களினதும், வர்த்தக நடவடிக்கைகள் உட்பட, அவ்வுரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் செயற்பாடுகள் சகல நேரங்களிலும் நியாயமான பராமரிப்புடனும் விடாமுயற்சியுடனும் பேணப்படுகின்றன அல்லது மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. யாதேனும் குடிமனைத் தொகுதி அல்லது வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரும்,

(அ) அத்தகைய குடிமனைத் தொகுதி அல்லது வளாகத்தையும் அதன் மீதுள்ள எந்தவொரு சொத்தையும் எல்லா நேரங்களிலும் பாதுகாப்பான மற்றும் உறுதியான நிலையில் பராமரிக்க முயற்சித்தல் வேண்டும்; மற்றும்

(ஆ) பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, தீ பாதுகாப்பு மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான வசதிகள் தொடர்பான ஏனைய விடயங்கள் குறித்து ஆதன முகாமையாளரால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கு இணங்குதல் வேண்டும்.

7. (1) குடிமனைத்தொகுதி அல்லது வளாகத்தின் அனைத்து உரிமையாளர்களினதும் பயன்பாட்டிற்காக பொதுவான பகுதிகள் இருக்கும்.

(2) பொதுவான பகுதிகள் பகிரப்பட்ட வசதிகளைக் கொண்டிருப்பதோடு மேற்படி பொதுவான பகுதிகளைப், பிறிதொரு நபர் பயன்படுத்துவதனை குடிமனைத்தொகுதி அல்லது வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் தடைசெய்தலாகாது.

(3) குடிமனைத்தொகுதி அல்லது வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பொதுவான பகுதிகளின் எந்தவொரு கட்டமைப்பையும் சேதப்படுத்தவோ அல்லது அதன் தோற்றத்தை மாற்றவோ கூடாது.

8. (1) குடிமனைத்தொகுதி அல்லது வளாத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாரும், கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள்ளான வீதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேக வரம்புகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) குடிமனைத்தொகுதி அல்லது வளாத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், எந்தவொரு நபருக்கும் ஆபத்தை விளைவிக்கும், இரைச்சலை ஏற்படுத்தும் அல்லது இடையூறை உருவாக்கும் வகையில் எந்தவொரு வாகனத்தையும் செலுத்தக் கூடாது.

9. (1) குடிமனைத்தொகுதி அல்லது வளாகங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும், தங்கள் வாகனத்தை வாகனம் நிறுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மாத்திரமே நிறுத்துதல் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்படாத அல்லது குறித்தொதுக்கப்படாத பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தையும், வாகன உரிமையாளரின் மீதான ஆபத்து மற்றும் செலவில், ஆணைக்குழுவினால் அல்லது ஆதன முகாமையாளரால் உடனடியாக அகற்றப்படுவதற்கு உட்படும்.

(3) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள் நிறுத்தப்பட்டுள்ள எந்தவொரு வாகனமும், அத்தகைய வாகனத்தின் உரிமையாளர் மீதான ஆபத்து மற்றும் பொறுப்பில் மட்டுமே இருக்கும். மேலும் கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார எல்லைக்குள் நிறுத்தப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்துக்கோ அல்லது அத்தகைய வாகனத்தில்

வைக்கப்பட்டுள்ள எந்தவொரு பொருள், அல்லது சொத்துக்கள் தொடர்பிலோ ஆணைக்குழுவோ அல்லது ஆதன முகாமையாளரோ எவ்வித பொறுப்பையும் கொண்டிருக்க மாட்டார்கள்.

10. இவ் விதிகளில் -

"சட்டம்" என்பது 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமாகும்:

"ஆணைக்குழு" என்பது சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவைக் குறிக்கும்:

"பொதுவான பகுதிகள்" என்பது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

"சமூக விதிகள்" என்பது சட்டத்தில் உள்ள அதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும் ; மற்றும்

"ஆதன முகாமையாளர்" என்பது சட்டத்தின் பிரிவு 59 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்டு பெயரிடப்பட்ட நிறுவனத்தைக் குறிக்கும்.

EOG 12 - 0062